## பத்து தோல்வி பழனிசாமி!

# வரக்கூடிய தேர்தலுக்குப் பிறகு 11 ஆகிவிடுவார்!

## நாமக்கல் தொகுதி தேர்தல் பரப்புரையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

நாமக்கல், ஏப்.11–

**நாமக்கல் சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் தி.மு.க. மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளரும், வேட்பாளருமான நாமக்கல் ப.ராணியை ஆதரித்து, நாமக்கல் – புதுச்சத்திரம் ஊராட்சியில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு, பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.**



தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய கனிமொழி கருணாநிதி எம்.பி.; நாமக்கல் தொகுதிக்கு நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தேர்ந்தெடுத்து உங்கள் கைகளிலே ஒப்படைத்திருக்கக்கூடிய வேட்பாளர் நம்முடைய வேட்பாளர், உங்களோடு உழைத்திருக்கக்கூடிய வேட்பாளர், மகளிர் தொண்டரணி செயலாளராக பணியாற்றிக் கொண்டிருக்கும் நாமக்கல் ராணி அவர்களுக்கு உங்களுடைய பொன்னான வாக்குகளை உதயசூரியன் சின்னத்தில் அளித்து, அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று உங்களை எல்லாம் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் பெயரைச் சொல்லி, மக்களைச் சந்தித்து வாக்குக் கேட்கும்போது, எங்களுடைய முதலமைச்சர், எங்களுடைய திராவிட மாடல் ஆட்சி மக்களுக்குத் தந்திருக்கக்கூடிய வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றித் தந்திருக்கிறோம் என்று சொல்லி, உரிமையோடு உங்களிடம் வாக்குக் கேட்கிறோம்.

இந்த ஐந்தாண்டு ஆட்சி என்பது மக்களுக்கான ஆட்சி. அதுவும் முக்கியமாக பெண்களுக்கான ஆட்சி. மக்களின் முன்னேற்றத்திற்கான ஆட்சி. நம்ம வீட்டு பிள்ளைகளுக்கான ஆட்சி என்பதை சொல்லி, தலைநிமிர்ந்து வாக்கு கேட்கிறோம்.

ஆனால், நம் எதிரணியில் இருக்கக்கூடியவர்கள், தோல்வி பயத்தால், எதைஎதையோ பேசிக்கொண்டிருக்கிறார்கள். எடப்பாடி பழனிசாமி எதை சொல்வது என்றே இல்லாத அளவிற்கு, இன்றைக்கு தரம் தாழ்ந்து பேசக்கூடிய நிலைக்கு இறங்கிவிட்டார். அவருக்கு தோல்வி பயம் மட்டுமில்லை. தோல்வி ஜூரம் வந்துவிட்டது. எதுவுமே தேறாதுன்னு தெரிந்துவிட்டது.

### தரம் தாழ்ந்து விட்டார்!

முதலமைச்சரை கீழ்த்தரமாக விமர்சிக்கக்கூடிய ஒருவராக அவர் மாறி விட்டார். தான்கூட ஒரு முதலமைச்சராக இருந்தோம். எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறோம் என்பதை மறந்துவிட்டு, இன்று தரம்தாழ்ந்துவிட்டார். முதலமைச்சரைப் பற்றி அவ்வளவு கொச்சையாகப் பேசக்கூடிய அளவிற்கு அவரின் தரம் தாழ்ந்துவிட்டது.

அதனால், இந்தத் தேர்தலில் நாம் சரியான பாடத்தைச் சொல்லித்தர வேண்டும். அவர் தொடர்ந்து, தமிழ்நாட்டிற்கு துரோகம் செய்துகொண்டிருக்கக்கூடிய ஒருவர். இன்றைக்கு தேர்தல் பிரச்சாரத்தில் பேசும்போது சொல்கிறார், டெல்லியில் இருக்கக்கூடிய பிஜேபியுடன் ஒற்றுமையாக இணக்கமாக செயல்பட்டால்தான் தமிழ்நாட்டிற்கு நல்லதைச் செய்ய முடியும் என்று சொல்கிறார். அதனால்தான் அவர் இணக்கமாக செயல்பட்டதாகச் சொல்கிறார்.

நான் கேட்கிறேன்..பிஜேபி தமிழ்நாட்டிற்கு ஏதாவது ஒரு நன்மையைச் செய்திருக்கிறார்களா? இந்தியை கொண்டுவந்து திணிக்கிறார்கள். நம்ம பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டிய கல்விக்கான நிதியை பிடித்துவைத்துக்கொண்டு, ரூ.3,600 கோடிக்கு மேல நிதியை நிறுத்திவைத்திருக்கிறார்கள். இந்தி படித்தால்தான் கொடுப்பேன் என்று நிறுத்திவைத்துள்ளார்கள்.

கீழடி ஆய்வறிக்கை, தமிழர்களின் தொன்மையை, பெருமையை உலகத்திற்குச் சொல்லக்கூடிய அந்த ஆய்வறிக்கையை மாற்றிக்கொடு, தமிழர்களின் பெருமையை, தொன்மையை நீங்கள் சொன்னால் ஏற்றுக்கொள்ள மாட்டோம், மாற்றிக்கொடு என்று சொல்லக்கூடிய ஒன்றிய அரசாங்கம். தமிழ்நாட்டிற்கு எதிரான திட்டங்களை, மக்களுக்கு எதிரான திட்டங்களை தொடர்ந்து கொண்டுவந்து கொண்டிருக்கக்கூடிய, நம்முடைய வரிப்பணத்தை வாங்கிகொண்டு, எதையுமே திருப்பிக் கொடுக்காத பிஜேபி ஆட்சி. அவர்களோடு இணக்கமாக இருக்க வேண்டும் என்று சொல்லக்கூடியவர்தான் எடப்பாடி பழனிசாமி. அவர் இணக்கமாக இருந்து தமிழ்நாட்டிற்கு என்ன திட்டத்தைக் கொண்டுவந்தார்?

### நீட் தேர்வை திணித்த கொடுமை!

நம்முடைய மாணவர்கள், மருத்துவக் கல்லூரியில் போய் படிக்க முடியாத நீட் தேர்வைக் கொண்டுவந்து திணிப்பதற்கு இவர் பயன்பட்டிருக்கிறார். வேற ஒன்றுமில்லை. அந்தத் திட்டத்தைத்தான் இவர் தீட்டி, சிறப்பாக செயல்படுத்தியிருக்கேன்னு சொன்னாரல்லவா, நீட்டைத் தான் செயல்படுத்தியிருக்கிறார்.

மக்களுடைய குடியுரிமையைப் பாதிக்கக்கூடிய அளவிற்கு, பறிக்கக்கூடிய அளவிற்கு சிஏஏ-வை செயல்படுத்த பிஜேபியுடன் நின்றிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

மின்சாரக் கட்டணத்தை உயர்த்திக் கொண்டே போகக்கூடிய ஒரு சூழ்நிலை. அது உதய் மின்திட்டதை, ஜெயலலிதா அவர்கள்கூட கையெழுத்துப்போடாத அந்தத் திட்டத்தில் இவர் கையெழுத்துப்போட்டதால்தான், இன்று தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மக்களும், நாடு முழுவதும் இருக்கக்கூடிய மக்களும் இந்த அளவுக்கு கஷ்டப்படராங்கன்ன இவரைப் போன்றவர்கள் போட்ட கையெழுத்தால்தான்.

விவசாயிகளின் வாழ்க்கையைப் பறிக்கக்கூடிய, எதிரான சட்டத்தை ஆதரித்து திட்டத்தைப் போட்டவர்தான் எடப்பாடி பழனிசாமி. நாடு முழுவதும் உள்ள கிராமங்களில் வசிக்கும் மக்களுக்காக கொண்டுவரப்பட்டதுதான் 100 நாள் வேலைத் திட்டம். மோடி ஆட்சிக்கு வந்தபிறகு, யாருக்காவது சம்பளம் சரியாக ஏறுகிறதா?

இல்ல...100 நாள் வேலை கிடைக்கிறதா? அதற்கு முன்பு கிடைத்தது. மோடி ஆட்சிக்கு வந்தபிறகு, அந்த 100 நாள் வேலைத் திட்டத்திற்குக் கொடுக்க வேண்டிய நிதியை குறைத்துக்கொண்டே வருகிறார்கள். அந்த நிதி ஒதுக்கீடு செய்வதில்லை. இப்போ அதற்கு சட்டம் வேறு போட்டுவிட்டார்கள்.

இங்க நாமக்கல் பக்கத்தில இருக்கக்கூடிய கிராமத்தில், 100 நாள் வேலை யாருக்குக் கொடுக்கணும், எத்தனை பேருக்குக் கொடுக்கணும், எவ்வளவு சம்பளம் கொடுக்கணும் என்பதை நாங்கள் டெல்லியில் இருந்து முடிவு செய்வோம். தமிழ்நாடு அரசு முடிவுசெய்யக்கூடாது என்று ஒரு சட்டத்தை கொண்டுவந்திருக்கிறது பிஜேபி ஆட்சி.

அந்த பிஜேபியை ஆதரித்து, அவர்களோடு கைகோர்த்துக்கொண்டு நிற்கக்கூடியவர்தான் எடப்பாடி பழனிசாமி. இப்படி, மக்களுக்கு எதிரான அத்தனை திட்டத்திற்கும் கைகோர்த்து, கைதட்டி வரவேற்றவர்தான் எடப்பாடி பழனிசாமி.

டி-லிமிட்டேசன், தொகுதி மறுசீரமைப்பு என்ற ஒன்றை, பெண்களுக்கான இடஒதுக்கீட்டைத் தருகிறேன் என்று சொல்லி, ஒன்றிய அரசாங்கம் இப்போது கொண்டுவருகிறார்கள். இப்போது இருக்கும் எண்ணிக்கையிலேயே கொடுக்கலாம். 33சதவீதம் பெண்களுக்கான இடஒதுக்கீட்டை.

### தமிழ்நாட்டை முடக்கும் தொகுதி மறுசீரமைப்பு!

ஆனால், தொகுதியெல்லாம் மறுசீரமைப்பு செய்துவிட்டுத்தான் கொடுப்பேன் என்று சொல்கிறார்கள். இப்போது தேர்தலுக்கு இடையே, எல்லா எதிர்க்கட்சிகளும், இப்போது வேண்டாம், பத்து நாட்கள் கழித்து பார்லிமென்டை வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லக்கூடிய நேரத்தில், 3 நாள் நாடாளுமன்றத்தைக் கூட்டியிருக்கிறது பிஜேபி.

ஏன்? எந்தவிதமான கருத்தையும் மக்களிடமும் கேட்கவில்லை. எதிர்க்கட்சிகளிடமும் கேட்கவில்லை. தமிழ்நாட்டிற்கு எத்தனை தொகுதிகள் நாம் இழந்துவிடுவோம். தமிழ்நாட்டில் மக்கள் தொகையை கட்டுப்படுத்தியிருக்கிறோம். தமிழ்நாடு வளர்ச்சி பெற்றிருக்கக்கூடிய ஒரு மாநிலமாக இருக்கிறது. அந்தநிலையிலே.. நமக்கு எத்தனை தொகுதிகள் குறையும் என்று தெரியவில்லை. ஒருவேளை நமக்கு குறையவில்லை என்றாலும், மற்றவர்களுக்கு எவ்வளவு அதிகரிக்கப்படும் என்று தெரியவில்லை.

அப்ப, நாம நாடாளுமன்றத்தில் பேசும்போது, நம்முடைய கருத்திற்கு மரியாதை இருக்காது. அப்படிப்பட்ட ஒரு நிலை வந்துவிடுமோ என்று எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் எப்படி அந்த மசோதாவைக் கொண்டுவரப்போகிறீர்கள் என்று கேள்வி கேட்டுக்கொண்டிருக்கக்கூடிய நேரத்தில், இந்தத் தேர்தல் நேரத்தில், எதுக்காக இதைப் பற்றி பேசுகிறீர்கள்? அமித்ஷாவே சொல்லிட்டாரு. எந்தப் பிரச்சனையும் இருக்காதுன்னு. அமித்ஷா சொல்லியது உங்களுக்கு வேண்டுமானால் தெய்வ வாக்காக இருக்கலாம். எங்களுக்கு இல்லை.

தமிழ்நாட்டின் உரிமைக்காக நாங்கள் தொடர்ந்து குரல் கொடுப்போம். தமிழ்நாட்டு மக்களின் பாதுகாப்பிற்காக தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகமும், முதலமைச்சர் தொடர்ந்து குரல் கொடுப்பார்கள், கேள்விகள் கேட்பார்கள். அது தேர்தலுக்கு இடையேவாக இருக்கட்டும், மற்ற நேரமாக இருக்கட்டும். நம்முடைய உரிமைகள் பாதிக்கக்கூடாது என்பதற்காக தொடர்ந்து குரல் எழுப்பிக்கொண்டிருப்போம். போராடிக்கொண்டிருப்போம். எடப்பாடி பழனிசாமி அவர்களே, உங்களைப் போல தமிழ்நாட்டை நாங்கள் எந்தக் காலத்திலும் விட்டுக்கொடுக்க மாட்டோம்.

### மக்கள் பாடம் புகட்டுவார்கள்!

அப்படி விட்டுக்கொடுக்கக்கூடிய உங்களை, தேர்தலுக்குத் தேர்தல், போன தேர்தலில் பிஜேபிக்கும் எனக்கும் ஒட்டில்லை, உறவில்லை, கூடப்போக மாட்டேன் என்றீர்கள். இந்தத் தேர்தலில் அமித்ஷா அவர்களே சொல்லிட்டார். பிரதமரே சொல்லிட்டாரு. நீங்கள் ஏன் கேள்வி கேட்கிறீர்கள் என்று எங்களைப் பார்த்து கேள்விகேட்கிறீர்கள். தமிழ்நாட்டிற்காக ஏன் பேசுகிறீர்கள் என்று கேள்வி கேட்கிறீர்கள். அதனால, உங்களைப் போன்றவர்களை தமிழ்நாட்டு மக்கள் அடையாளம் கண்டிருக்கிறார்கள். இந்தத் தேர்தலில் நிச்சயமாக உங்களுக்கு மக்கள் சரியான பாடத்தைப் புகட்டுவார்கள்.

உங்களுடைய தரமற்ற பேச்சுகளுக்கு.. தமிழ்நாட்டிற்கு நீங்கள் செய்யக்கூடிய துரோகங்களுக்கு சரியான பாடத்தை மக்கள் சொல்லித் தருவார்கள்.

முதலமைச்சருடைய மக்களுக்கான பணிகளை பட்டியலிட்டுக்கொண்டே போகலாம். ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத் தொகை தருகிறேன் என்று சொல்லி, இன்று ஒரு கோடியே 31 லட்சம் சகோதரிகளுக்கு அந்தத் தொகை வழங்கப்பட்டுவருகிறது.

மறுபடியும் தமிழ்நாட்டில் நம்முடைய ஆட்சிதான். அதில் எந்த சந்தேகமும் இல்லை. இன்னும் ஒரு மாசம். நம்முடைய திராவிட மாடல் ஆட்சி, நம்முடைய அண்ணன் தளபதி அவர்களுடைய ஆட்சி.

எடப்பாடி பழனிசாமி அவர்களைப் பார்த்து முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்லுவார், பத்து தோல்வி பழனிசாமி என்று. வரக்கூடிய தேர்தலுக்குப் பிறகு 11 ஆகிவிடும். அதையும் சேர்ந்து உங்களது கணக்கில் வைத்துக்கொள்ளுங்கள்.

ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு, நம்முடைய தொடரக்கூடிய நேரத்தில், மக்களுக்குத் தந்திருக்ககூடிய வாக்குறுதிகளை நிறைவேற்றிக் காட்டினோம். உங்கள் ஆட்சியில் நீங்கள் செல்போன் கொடுப்பதாகக் கூறினீர்கள். யாருக்கும் கொடுக்கவில்லை.

ஆனா.. நம்முடைய ஆட்சி வந்தவுடன் மக்களுக்குத் தந்தை வாக்குறுதிகளை நிறைவேற்றிக் காட்டினோம். ஆயிரம் ரூபாய் கொடுத்தோம். இந்த ஆட்சி தொடரவிருக்கிறது. அந்த ஆட்சியிலே ஆயிரம் ரூபாய், 2 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்.

இங்கே இருக்கக்கூடிய சகோதரிகளுக்கு, சுயஉதவிக்குழுக்களில் இருக்கக்கூடிய சகோதரிகளுக்கு சொந்தமாக தொழில் தொடங்க, ரூ.5 லட்சம் மானியத்தோடு கூடிய கடன் வழங்கப்படும். நிலத்தை, நகையை அடமானம் கேட்காமல் இந்தக் கடன் வழங்கப்படும்.

கல்லூரியில் படிக்கும் நம்ம வீட்டுப் பிள்ளைகளுக்கு இப்போது மாதம் ரூ.1000 கொடுக்கப்படுகிறது. அடுத்து நம்முடைய ஆட்சி.. தொடரக்கூடிய நமது ஆட்சியிலே அந்தத் தொகை ரூ.1500ஆக உயர்த்தி வழங்கப்படும்.

லேப்டாப்பை நிறுத்தியது எடப்பாடி பழனிசாமி. மறுபடியும் கொண்டுவந்தது நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள். அடுத்து வரக்கூடிய நமது ஆட்சியில், 5 ஆண்டுகளுக்குள் 35 லட்சம் மாணவ-மாணவிகளுக்கு லேப்-டாப்கள் வழங்கப்படும்.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரத் திட்டத்தை கொண்டுவந்தவர் நமது தலைவர் கலைஞர் அவர்கள். அந்த வழியிலே, நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்கள், வரக்கூடியதேர்தலுக்குப் பிறகு, எந்தவித மின்மீட்டர்களும் பொறுத்தப்படாத மின் மோட்டார்கள், 20 லட்சம் விவசாயிகளுக்குமேல் பயன்பெறக்கூடிய வகையிலே வழங்கப்படும்.

### தொடரும் வளர்ச்சித் திட்டங்கள்!

நாமக்கல் தொகுதியில் தி.மு.க அரசு செய்த வளர்ச்சிப் பணிகள்: புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட 300க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு ரூ. 854.37 கோடி மதிப்பீட்டில் ராசிபுரம் கூட்டு குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் மூலம் குடிசை இல்லா மாவட்டமாக நாமக்கல் மாவட்டம் மாறியுள்ளது.

நைனாமலை வரதராஜ பெருமாள் கோவிலுக்கு சாலை அமைக்கப்பட்டுள்ளது. புதுச்சத்திரம் ஒன்றியம் முழுவதும் சாலை வசதி மேம்படுத்தப்பட்டுள்ளது. புதுச்சத்திரத்தில் சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களுக்கு மார்பளவு சிலையுடன் அரங்கம் திறக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் தொகுதிக்கான தேர்தல் வாக்குறுதிகள்: நாமக்கல்லில் ஜவுளிக் குழுமம் உருவாக்கப்படும். காவேரி ஆற்றில் மேலப்பேட்டைப்பாளையம் பகுதியில் குளிப்பதற்கான படித்துறை அமைத்துத் தரப்படும். திருமணிமுத்தாற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் அமைக்கப்படும்.

கோழி வளர்ப்புத் தொழிலில் ஆலோசனைகளை வழங்கிட ஒருங்கிணைந்த கோழி வளர்ப்பு மையம் உருவாக்கப்படும். மோகனூர் பாசன வாய்க்கால் கரையில் உள்ள மண்பாதையை, கான்கிரீட் பாதையாக மாற்றித் தரப்படும். சுய உதவி குழு பெண்களுக்கு முதலீட்டுடன் தொழில் தொடங்க ரூ.5 லட்சம் வரை பிணை எதுவுமின்றி மானியத்துடன் வங்கிக் கடனுதவி வழங்கப்படும்.

இதுபோன்ற திட்டங்களையெல்லாம் நிறைவேற்றித் தர எங்களுக்கொரு வாய்ப்பை வழங்குவீர்கள் என்று நிச்சயமாக நான் நம்புகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சி தொடர வேண்டும், தமிழ்நாட்டின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்காக, திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி இந்த மண்ணிலே தொடர வேண்டும்.

தமிழர்களின் சுயமரியாதையைப் பாதுகாக்க, மொழியைப் பாதுகாக்க, நமது பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாதுகாக்க, நாம் இந்தத் தேர்தலிலே, திராவிட முன்னேற்றக்கழகத்திற்கும், நம்முடைய கூட்டணி இயக்கங்களுக்கும் வாக்களிக்க வேண்டும் என்ற உறுதியை நாம் அத்தனை பேரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஒன்றை மறுபடியும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய பிரச்சாரத்தை நான் கீழடியிலே இந்த முறை தொடங்கியிருக்கிறேன். ஏனென்றால், இந்தத் தேர்தல் கீழடிக்கும், நாக்பூருக்குமான தேர்தல் என்பதை சொல்ல விரும்புகிறேன். நம்முடைய சித்தாந்தத்திற்கும், அங்கு இருக்கக்கூடிய ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்திற்கும் எதிரான தேர்தல் இந்தத் தேர்தல்.

தமிழத்தை அவர்களிடமிருந்து பாதுகாக்க வேண்டிய தேர்தல். இந்த நாட்டை மீட்டெடுக்க வேண்டிய தேர்தல் என்ற உணர்வோடு நாம் இந்தத் தேர்தலில் வாக்களிக்க வேண்டும். மிகப்பெரிய வெற்றியை இந்தத் தொகுதியிலே நமது நாமக்கல் ராணி அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, நீங்கள் உருவாக்கித் தந்திட வேண்டும்.

இவ்வாறு – கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.



திரு.வி.க நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 71–வது வட்டத்தில் கழக வேட்பாளர் வழக்கறிஞர் கே.எஸ்.ரவிச்சந்திரன் வாக்குச் சேகரிக்கும்போது, அமமுக வட்டச் செயலாளர் வெல்டிங் ராஜா, கழகத் துணை அமைப்புச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி மற்றும் கிழக்கு பகுதி கழக செயலாளர் தமிழ்வேந்தன், முன்னிலையில் கழகத்தில் இணைத்துக் கொண்டார். மேலும் அவருடன் அமமுக மாவட்ட மகளிர் அணி இணைச்செயலாளர் ஆர்.கிருஷ்ணவேணி, மகளிர் அணி வட்ட பிரதிநிதி எம்.பாக்கியலட்சுமி, வட்ட பிரதிநிதி ஹேமந்த் குமார் இணைந்தனர். இந்த நிகழ்வில் வட்டக் கழகச் செயலாளர் பரிமலாசுரேஷ், பகுதித் துணைச் செயலாளர்கள் பெரம்பூர் ராஜன், புல்லட் ரமேஷ், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ரபி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



எழும்பூர் வடக்கு பகுதி, 99வது வட்டத்தில் கழக வேட்பாளர் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார். சென்னை மாநகராட்சி நியமனக் குழு உறுப்பினர் எழும்பூர் வடக்கு பகுதி கழகச் செயலாளர் சொ.வேலு முன்னிலை வகித்தார். 99வது வட்ட கழக செயலாளர் ரங்கநாதன் தலைமையில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள்,கழக நிர்வாகிகள், தோழர்கள் கலந்து கொண்டனர்.